# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS.
~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

C 8167230

1. District : Salem
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No.: 03/AC/2025
மு.த.அ. எண்
Date: 02.04.2025
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of
Sections பிரிவுகள்: 7(a).
(ii) Act சட்டம்: Corruption Act 1988 as
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: amended in 2018.
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to : 1) About 1 month before
நாள் வரை 2) On 28.03.2025 at about 15-30 hrs.
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை 3) On 01.04.2025 at about 10-00 hrs.

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.04.2025
Time :
நேரம் 18-00 hrs.

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I 02.04.2025
Time :
நேரம் 07-00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 15 Km North west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Village Administrative Office, Chellapillaikuttai Village, Omalur Taluk, Salem Dt.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Rajendiran
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Mariappan.
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 43 years
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian.
நாட்டினம்
(e) Passport No. : –
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : –
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : –
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Daily wage Labourer
தொழில்
(g) Address : Adidravidar colony, Chellapillaikuttai Village, Omalur Taluk, Salem Dt.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Ravichandiran, Village Administrative Office, Chellapillaikuttai Village, Omalur Taluk, Salem Dt.
2) Tr. Perumal, Village Assistant, Chellapillaikuttai Village, Omalur Taluk, Salem Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant :
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Enclosed in separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. ராஜேந்திரன்.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / 2.4.2025
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 02/04/2025.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 02/04/2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.00 hrs.

Name: பெயர் M. Nallammal,
Rank: நிலை ...................No. எண் ..........
Inspector of Police,
VAC, Salem.

**சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** 01.04.2025-ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை சுமார் 18.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, M.இராஜேந்திரன், த/பெ. மாரியப்பன், ஆதிதிராவிடர் காலனி, செல்லப்பிள்ளைக்குட்டை, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் M.இராஜேந்திரன், S/o. மாரியப்பன், ஆதிதிராவிடர் காலனி, செல்லப்பிள்ளைக்குட்டை, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம். ஐயா, நான் செல்லப்பிள்ளைக்குட்டை கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் கூலி வேலை செய்து வருகிறேன். 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 2013-ல் இருந்து செல்லப்பிள்ளைக்குட்டை ஆதிதிராவிடர் காலனியில் நத்தம் குடியிருப்பு பகுதியில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். அந்த காலனியில் சுமார் 42 வீடுகள் உள்ளன. அங்கு குடியிருப்பவர்களுக்கு வருவாய் துறை மூலம் பட்டா வழங்குவதாகவும், அதற்கு மனு கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஏற்கனவே சிலர் பட்டாவும் பெற்றுவிட்டார்கள். அதனால் கடந்த சுமார் 1½ மாதத்திற்கு முன்பு செல்லப்பிள்ளைக்குட்டை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று எனது மனைவி சங்கீதா பெயரில் பட்டா கேட்டு மனு கொடுத்தோம். அதன் பின்னர் வருவாய் துறை அதிகாரிகள் எங்கள் வீட்டினை வந்து பார்வையிட்டு சென்றார்கள். பின்னர் சுமார் 1 மாதத்திற்கு முன்பு செல்லப்பிள்ளைக்குட்டை கிராம உதவியாளர் திரு.பெருமாள் என் வீட்டிற்கு வந்து என்னை பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகில் வரச்சொன்னார். நானும் சென்றேன். அப்போது என்னிடம் உங்க வீட்டிற்கு பட்டா வேணும் என்றால் ரூ.30,000/- தனியாக பணம் கொடுக்கவேண்டும், அப்போதுதான் பட்டா கிடைக்கும் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் இப்போது என்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் கடந்த 18.03.2025-ம் தேதி எனது அம்மா மாரியம்மாள் உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார். அவரது இறப்புச்சான்றிதழ் சம்பந்தமாக நான் சென்ற வாரத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு

சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த வி.ஏ.ஓ. திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் எனது வீட்டிற்கான பட்டா குறித்தும் கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே பெருமாள் உங்ககிட்ட வந்து சொல்லியிருப்பார், அவர் சொன்ன மாதிரி பணம் கொடுத்திருந்தால் அப்பவே பட்டா கிடைச்சிருக்கும் என்று சொன்னார். அப்போது கிராம உதவியாளர் திரு.பெருமாள் அவர்களும் அங்கு இருந்தார். நான் பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் கடந்த 28.03.2025-ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு நான் வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ. திரு.ரவிச்சந்திரன் அவர்களை பார்த்து எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் குறித்தும், வாரிசு சான்றிதழ் விண்ணப்பிப்பது குறித்தும், எங்க வீட்டிற்கான பட்டா குறித்தும் கேட்டேன். நீங்க போய் இ-சேவை மையத்தில் டெத் சர்டிபிகேட் எடுத்துட்டு, அப்படியே வாரிசு சான்றிதழுக்கு விண்ணப்பம் போட்டுவிடுங்க என்று சொன்னார். மேலும் பெருமாள் கிட்ட பேசிக்கோங்க அவர் உங்களுக்கு பட்டா சம்பந்தமாக மற்ற விபரம் சொல்லுவார் அதுபடி செய்யுங்க என்று சொன்னார். அப்போது பெருமாள் அலுவலகத்தில் இல்லை. பின்னர் அன்று மாலை சுமார் 3½ மணி அளவில் பெருமாள் அலுவலகம் வந்தார். அவரை பார்த்து வி.ஏ.ஓ. சொன்ன விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் நான்தான் ஏற்கனவே சொல்லிட்டேன், காசு கொடுத்தால் உடனே முடிந்துவிடும் என்று சொன்னார். அதற்கு நான் ரூ.30,000/- என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரூ.10,000/- கொடுத்திடு, அதிகாரிங்ககிட்ட நான் பேசிக்கொள்கிறேன் என்று சொன்னார். அவ்வளவு பணம் என்னிடம் இப்போது இல்லை, ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்று சொன்னேன். அப்போது வி.ஏ.ஓ. ரவிச்சந்திரன் அவர்களும் அலுவலகத்தில் இருந்தார். வி.ஏ.ஓ. அவர்களும் என்னிடம் போய்ட்டு அவர் சொல்ற மாதிரி பணம் ரெடிபண்ணிட்டு வாங்க இந்த முறை பட்டா வாங்கிக்கிலாம் என்று சொல்லியனுப்பினார். பின்னர் 29.03.2025-ம் தேதி நான் இ-சேவை மையத்திற்கு சென்று என்னுடைய அம்மாவின் டெத் சர்டிபிகேட் எடுத்துக்கொண்டு வாரிசு சான்றிதழுக்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்ப எண்.TN-720250329888 ஆகும். இன்று 01.04.2025-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு செல்லப்பிள்ளைகுட்டை வி.ஏ.ஓ. ஆபீஸ் போய்விட்டு வி.ஏ.ஓ.விடம் வாரிசு சான்றிதழுக்கு விண்ணப்பித்தது குறித்து கூறிவிட்டு ஒப்புகை சீட்டை காண்பித்தேன். அப்போது உதவியாளர் பெருமாள் அங்கு இருந்தார். வி.ஏ.ஓ. திரு.ரவிச்சந்திரன், உதவியாளர் பெருமாள் அவர்களை பார்க்குமாறும் பணம் பற்றி அவர் சொல்றமாதிரி

செய்யுங்க என்றும் கூறினார். பெருமாள் என்னிடம் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.10,000/-ஐ கொண்டுவந்தாயா என்று கேட்டார். நான் இன்னும் இரண்டு நாட்களுக்குள் எப்படியும் கொடுத்துவிடுவதாக சொன்னேன். சரி சீக்கிரம் கொண்டுவந்து கொடு அப்போதுதான் வாரிசு சான்றிதழ் வேலையும் முடியும், பட்டாவும் கிடைக்கும் என்று சொன்னார். எனக்கு செல்லப்பிள்ளைக்குட்டை கிராம நிர்வாக அலுவலர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் உதவியாளர் திரு.பெருமாள் ஆகியோருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது வாரிசு சான்றிதழ் மற்றும் பட்டா ஆகியவை பெற விருப்பமில்லை. அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு(ஒப்பம்/-xxxxxx (M.இராஜேந்திரன்) 1.4.2025.

Sir, Received the above computer typed complaint on 01.04.2025 at about 18.00 Hrs. Sd xxxx (M.Nallammal) 01/04/2025, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.03/AC/25 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 02.04.2025 at 07.00 hrs. Sd xxxx (M.Nallammal) 02/04/2025, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 02/04/2025
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.